1993 ஏப்ரல் 29]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 531, டாக்டர் எஸ். சுந்தரராஜ், மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

531

நகரங்களில் கூட்டுறவு பண்டகசாலை தொடங்கும் திட்டம்.

*16727—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நகரங்கள்தோறும் கூட்டுறவு பண்டகசாலை (Super Market) தொடங்க அரசிடம் திட்டம் உள்ளவதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இம்மாநிலத்தில் 14 மாவட்டங்களில் 34 கூட்டுறவு சிறப்பங்காடிகள் (Super Markets) பல்வேறு நகரங்களில் அமைந்துள்ளது. நகரங்கள்தோறும் கூட்டுறவு பண்டகசாலை தொடங்க தற்போது திட்டம் இல்லை.

(ஆ) எழவில்லை.

டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவே நாட்டுயர்வு, ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு என்ற பழமொழிக்கேற்ப செயல்படுகிற தமிழக அரசு, பொருள்கள் தட்டுப்பாடின்றிக் கிடைக்கவும், நியாய விலையில் குறிப்பிட்ட நேரத்தில் கிடைக்கவும் எல்லா நகராட்சிகளிலும், எல்லா பேரூராட்சிகளிலும் கூட்டுறவுப் பண்டக சாலைகளை ஏற்படுத்த மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சரவர்கள் ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு சிறப்பங்காடிகள் எங்கெங்கே அமைக்கலாம் என்பதற்கு அளவுகோல் இருக்கிறது. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஆர்டர்.

[1993 ஏப்ரல் 29

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன்: இதுவரை மத்திய அரசு இதற்கு வேண்டிய நிதி உதவியைச் செய்து வந்தது. தற்போது அது மாநிலத்திற்கு மாற்றப்பட்டிருக்கிறது. 1 லட்சம் முதல் 3 லட்சம் வரை மக்கள் தொகை உள்ள நகரங்களுக்கு 40 லட்சம் ஆண்டு விற்பனை இருக்க வேண்டும். அதைப் போல 3 லட்சத்திலிருந்து 8 லட்சம் வரை மக்கள் தொகை கொண்ட நகரங்களுக்கு 80 லட்சம் ஆண்டு விற்பனை இருக்க வேண்டும். 8 லட்சத்திற்குமேல் மக்கள் தொகை இருக்கும் நகரங்களில் 175 லட்சம் $1\frac{3}{4}$ கோடி ஆண்டு விற்பனை இருக்க வேண்டும். அதிலே ஏறத்தாழ 10 சதவிகிதம் அவர்களுக்கு நிதி உதவி வழங்கலாம் என்று அளவுக்கோல் இருக்கிறது. அதற்கேற்ப பரிசீலனை செய்யலாம்.

டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. சென்னையிலே அமுதம். மதுரையில் பாண்டியன் சூப்பர் மார்க்கெட் நல்ல முறையில் இயங்கி வருகின்றன, திறமை மிக்க அதிகாரிகள் அந்தக் கூட்டுறவு சூப்பர் மார்க்கெட்டுகளை நிர்வாகம் செய்வதால். மக்களுக்குப் பயன்தரும் ஸ்தாபனமாக அவை உள்ளன, தனியார்கள் பங்கு போட்டுக்கொண்டு. மேன்மேலும் வளரும் இக்காலத்தில் கூட்டுறவுத் துறையை நல்ல முறையில் செயல்படுத்திக் கொண்டிருக்கும் கூட்டுறவு அமைச்சரவர்கள் எல்லா நகரங்களிலும் சூப்பர் மார்க்கெட்டுகளை ஏற்படுத்திட மீண்டும் பரிசீலனை செய்வாரா? அவ்வாறு ஏற்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. எல்லா நகரங்களிலும் கூட்டுறவு சிறப்பங்காடிகள் ஏற்படுத்த வேண்டுமென்ற எண்ணம் அரசுக்கு இருக்கிறது, ஆனாலும் ஒரு குறுகிய காலத்திற்குள் எல்லா நகரங்களிலும் நிதி நிலைமை காரணமாக ஏற்படுத்துவது கடினம், ஆகவே படிப்படியாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் யோசனையைப் பரிசீலனை செய்யலாய் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்,

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 532 டாக்டர் அ. ஸ்ரீதரன். மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்,